Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 14, 2024

வியாழக்கிழமை மார்ச் 14, 2024 | ஒளி: 09 கதிர்: 212 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## முட்டை தள்ளுபடி



லங்கா சதொச விற்பனை நிலையங்களில் வரம்புகள் இன்றி தேவையான அளவு முட்டைகளை கொள்வனவு செய்ய முடியும் என லங்கா சதொச தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஒரு முட்டை 43 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தள்ளுபடி ஏப்ரல் 13 வரை செல்லுபடியாகும் என்றும் அறிவித்துள்ளது.

# “கணவனின் சாவுக்கு கடற்படையும் காரணம்”

எம்.றொசாந்த்

எனது கணவரின் சாவுக்கு காரைநகர் கடற்படையும் ஒரு காரணம் என உயிரிழந்த இளைஞனின் மனைவி குற்றம் சாட்டியுள்ளார்.

காரைநகர் பகுதிக்கு கணவன்-மனைவி சென்று விட்டுத் திரும்பும் வழியில், கணவன் மனைவியைக் கடத்தி சென்ற வன்முறை கும்பல் கணவனைப் படுகொலை செய்துள்ளது.

இது தொடர்பில் உயிரிழந்தவரின் மனைவி தெரிவிக்கையில்,

காரைநகருக்குச் சென்று விட்டு, மோட்டார் சைக்கிளில் நானும் எனது கணவரும் வீடு திரும்பும் வேளையில், பொன்னாலை பாலத்திற்கு அருகில் எம்மை வழிமறித்த கும்பல் வாகனத்தில் எம்மை கடத்த முயற்சித்தனர்.

அவ்வேளை, நானும் கணவரும் அவர்களிடம் தப்பித்து அருகில் இருந்த கடற்படை முகாமிற்குள் தஞ்சம் புகுந்தோம். கடற்படையினர் எம்மை அங்கிருந்து விரட்டினார்கள்.

“எங்களை கடத்த போறாங்க, எங்களை காப்பாற்றுங்க“ என கடற்படையிடம் மன்றாடினோம். ஆனால், அவர்கள் எங்களை முகாமில் இருந்து துரத்தினார்கள். அவ்வேளையிலே எம்மை அவர்கள் வாகனத்தில் கடத்தி சென்றனர்.

கடற்படையினர் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டு, எமக்கு அடைக்கலம் கொடுத்து இருந்தால், எனது கணவரின் உயிர் பிரிந்திருக்காது. எனது கணவரின் சாவுக்கு கடற்படையும் ஒரு விதத்தில் காரணம் என தெரிவித்தார்.

அதேவேளை, கடற்படையினர் அடைக்கலம் கொடுக்காது இருந்தாலும், தமது முகாமிற்கு அருகில் வாகனத்துடன் நின்ற கும்பலைத் துரத்தி விட்டு, இவர்களை அனுப்பி வைத்திருக்கலாம். அல்லது வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கி இருக்கலாம்.

தொடர்ச்சி P2




### வெடுக்குநாறிமலை விவகாரம்:

# கைதானோர் உண்ணாவிரதம்

**புதன்கிழமையும் உணவினை உட்கொள்வதற்கு மறுத்துள்ளனர்**

**எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று உத்தரவு**



க. அகரன்

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளனர்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று செவ்வாய்க்கிழமை (12) உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனையடுத்து அவர்கள் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் செவ்வாய்க்கிழமை (12) மாலை அடைக்கப்பட்டனர். இந்நிலையில், தங்களை விடுதலை செய்யகோரி அவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

தொடர்ச்சி P2

## “போக்கற்றவர்களே விமர்சிக்கின்றனர்”

செந்தூரப் பிரதீபன்

போக்கற்றவர்கள் நரம்பற்ற நாக்குகளினால் கடலட்டைப் பண்ணைகளைப் பற்றி தவறாகப் பேசுவதாக சாடியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளில் பல்தேசியக் கம்பனிகளோ சீனப் பிரஜைகளோ சம்மந்தப்பட்டிருப்பதை நிரூபிக்குமாறும் சவால் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “புரியும் மொழியில் பதில்”



பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்குப் புரியும் மொழியில் பதில் வழங்கத் தயாராக உள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற பாதாள உலகக் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பல அப்பாவிகள் பலியாகியுள்ளனர்.

தொடர்ச்சி P2





## சிவலிங்கத்தை வழிபட்ட வெள்ளை நாகம்

எம்.றொசாந்த்

இராணுவத்தினரால் வழிபட்டு வந்த சிவலிங்கம் ஒன்றை வெள்ளை நாகப் பாம்பு ஒன்றும் வழிபட்டு வந்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாகக் கடந்த 33 வருடங்களாகக் காணப்பட்ட சுமார் 20 ஏக்கர் காணி அண்மையில் காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் ஒரு காணிக்குள் புளியமரம் ஒன்றின் கீழ், சிறு பிள்ளையார் கோவில் ஒன்றை அமைத்து , அதனுள் ஆட்டுக்கல் ஒன்றினை சிவலிங்கமாக உருவகப்படுத்தி இராணுவத்தினர் வழிபட்டு வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## எரிக் வோல்ஷ்டன் அனுரகுமார சந்திப்பு

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ், பெலவத்தையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் தேசிய மக்கள் படையின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவை புதன்கிழமை (13) சந்தித்தார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் (அரசியல்) பேட்ரிக் பிக்கரிங் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2

## வடமாகாண பிரதம செயலாளர் நியமனம்



வடக்கு மாகாண பிரதமச் செயலாளராக எல்.இளங்கோன் மற்றும் வடமேல் மாகாண பிரதமச் செயலாளராக தீபிகா கே குணரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால்

தொடர்ச்சி P2

## “புதிய கிராம சேவகர்கள் நியமிக்கப்படுவர்”

ரஸீன் ரஸ்மின்



கிராம சேவகர் பற்றாக்குறை காணப்படும் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இம்மாத இறுதிப்பகுதிக்குள் புதிதாக கிராம சேவகர்கள் நியமிக்கப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## யாழ். இளைஞன் படுகொலை: கிளிநொச்சியில் நால்வர் கைது

### கடத்த பயன்படுத்திய காரும் மீட்பு

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணத்தில் இளைஞன் ஒருவரைக் கடத்தி சென்று படுகொலை செய்த குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் பதுங்கியிருந்த நான்கு சந்தேகநபர்கள் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய தவச்செல்வம் பவிதரன் எனும் இளைஞன் காரைநகர் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் தனது மனைவியுடன் சென்று விட்டு

தொடர்ச்சி P2

## சீருடையுடன் ‘ஸ்பா’

**பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பி, பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டார்**



முதலாம் தரச் சீருடை அணிந்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியில், சீருடையுடன் ஸ்பா சென்றுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. சேவையைப் பெற்றுக்கொள்வதற்காகவே அவர், சீருடையுடன் ஸ்பா சென்றுள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

யக்கல பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அந்த பொலிஸ் சார்ஜன்ட், விசாரணைகளுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. தொம்பே பொலிஸில் இணைத்துக்கொள்ளப்பட்ட பொலிஸ் சார்ஜன்டே இவ்வாறு விசாரணைக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## எரிக் வோல்ஷ்டன் அனுரகுமார சந்திப்பு

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ், பெலவத்தையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் தேசிய மக்கள் படையின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவை புதன்கிழமை (13) சந்தித்தார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் (அரசியல்) பேட்ரிக் பிக்கரிங் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கையின் தற்போதைய சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய மக்கள் சக்தியின் திட்டங்கள் குறித்தும் இரு தரப்புக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “கணவனின் சாவுக்கு கடற்படையும் காரணம்”

கடற்படையின் கண் முன் இருவரை வாகனத்தில் வந்தவர்கள் கடத்தி சென்ற போதும் கடற்படையினர் அதனைத் தடுக்கவோ , கடத்தல் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்காமை இருந்தமை கடற்படை மீதும் எங்களுக்குச் சந்தேகம் வருகிறது என உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் தெரிவித்தனர்.

# கைதானோர் உண்ணாவிரதம்

குறிப்பாக நீதிமன்றிற்குக் கொண்டுசெல்லப்படும் போதே, அவர்கள் உணவினை எடுத்திருக்கவில்லை. இந்நிலையில், புதன்கிழமையும் உணவினை உட்கொள்வதற்கு மறுத்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட எட்டு பேரில் ஆலய பூசாரியார் த.மதிமுகராசா, து.தமிழ்ச்செல்வன், தி.கிந்துயன்,சு.தவபாலசிங்கம், விநாயகமூர்த்தி ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

## சிவலிங்கத்தை வழிபட்ட வெள்ளை நாகம்

அந்த ஆலயத்திற்குப் பௌர்ணமி தினம் உள்ளிட்ட விசேட தினங்களில் வெள்ளை நாகப் பாம்பு உள்ளிட்ட சில பாம்புகள் வந்து செல்வதனை இராணுவத்தினர் அவதானித்து , வெள்ளை நாகப் பாம்பு ஒன்று சிவலிங்கத்தைச் சுற்றி இருந்தவேளை, அதனை தமது கையடக்க தொலைபேசியில் காணொளியாகப் பதிவு செய்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் அண்மையில் அக்காணிகளுக்குள் இருந்து இராணுவத்தினர் வெளியேறிய போது , குறித்த காணொளியை காணி உரிமையாளருக்குக் கொடுத்த இராணுவத்தினர், “இதொரு சக்தி வாய்ந்த கோவில்” என கூறி அதனைத் தொடர்ந்து பராமரிக்குமாறு கூறியுள்ளனர்.

குறித்த காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருவதால் , அக்கோவிலுக்குப் பலரும் நேரில் சென்று வழிபட்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த கோவில் அமைந்துள்ள பகுதியில் உள்ள புளியமரத்தில் இருந்து வெள்ளை நிற திரவம் ஒன்று வடிந்து வருவதனை அவதானித்துள்ள மக்கள் பால் வடிவதாகக் கூறுகின்றனர்.

## யாழ். இளைஞன் படுகொலை: கிளிநொச்சியில் நால்வர் கைது

வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை, பொன்னாலை பாலத்திற்கு அருகில் வைத்து , கணவன் மனைவி இருவரும் இருவேறு வாகனங்களில் வன்முறை கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்டனர்.

பின்னர் மனைவியை சித்தங்கேணி பகுதியில் இறக்கி விட்டு, கணவன் மீது தாக்குதலை மேற்கொண்டு வாளினால் வெட்டி படுகாயங்களை ஏற்படுத்திய பின்னர் வட்டுக்கோட்டை வைத்தியசாலை முன்பாக வீசி சென்று இருந்தனர்.

படுகாயங்களுடன் காணப்பட்ட இளைஞனை வைத்தியசாலை பணியாளர்கள் மீட்டு, நோயாளர் காவு வண்டி ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ் குழுவினர், சந்தேக நபர்கள் கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் பதுங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து, அங்கு விரைந்த பொலிஸ் குழுவினர் நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிளை கைப்பற்றி உள்ளதாகவும், கைது செய்யப்பட்ட நபர்கள் வட்டுக்கோட்டை மற்றும் அராலி பகுதிகளைச் சேர்ந்த 37, 32 , 25 மற்றும் 22 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில், அவர்கள் கொலை செய்வதற்குப் பயன்படுத்திய கார், அராலி மேற்கு நொச்சிக்காட்டு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் உயிரிழந்தவரின் சகோதரன் ஒருவர் சாமியைத் தூக்குவதற்கு முற்பட்டவேளை, ஆலய இளைஞர்கள் சிலர் அவரை தடுத்து முரண்பட்டுள்ளனர். அதனால் ஆத்திரமுற்ற இளைஞன், தனது சகோதரனுடன் முரண்பட்ட இளைஞர்கள் மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்தியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இந்த சம்பவத்திற்குப் பழி தீர்க்கும் வகையிலேயே தம்மைத் தாக்கிய இளைஞன், தாக்குதலுக்கு இலக்கான இளைஞர்களின் வழிநடத்தலில் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

## வடமாகாண பிரதம செயலாளர் நியமனம்

இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதி செயலகத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை (12) கையளித்தார். இலங்கை நிர்வாகச் சேவையின் தலைசிறந்த அதிகாரியான எல்.இளங்கோவன் வடக்கு மாகாண அமைச்சுக்கள் பலவற்றின் செயலாளர் பதவி வகித்ததுடன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகும் பணியாற்றியுள்ளார்.

எல்.இளங்கோவன் வடக்கு மாகாண பிரதமச் செயலாளராக நியமனம் பெறும் வரை, வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## சீருடையுடன் ‘ஸ்பா’

யக்கல பொலிஸ் பிரிவில் கண்டி வீதியில் உள்ள ஸ்பா மத்திய நிலையத்துக்குச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக, பொலிஸ் சீருடையில் சென்றிருந்தமை தொடர்பில், யக்கல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், அந்த நிலையத்துக்கு பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பி, பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

### பெப்ரவரி மாத இறுதிக்குள்

## இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் 33% உறுதிமொழிகளை ‘நிறைவேற்றத்’ தவறியுள்ளது

### ‘நிறைவேற்றப்படாத’ உறுதிமொழிகள் பல ஆளுகையை மேம்படுத்துவது தொடர்பானவை

வெரிட்டே ரிசர்ச்சின் ‘ IMF கண்காணிப்பானின்’ பெப்ரவரி மாத புதுப்பிப்பின்படி, இலங்கை அதன் சர்வதேச நாணய நிதியத் (IMF) திட்டத்தில் 2024 பெப்ரவரி இறுதிக்குள் நிறைவேற்ற வேண்டிய உறுதிமொழிகளில் 33% ஐ நிறைவேற்றத் தவறியுள்ளது.

‘நிறைவேற்றப்படாதவை’ என வகைப்படுத்தப்பட்டுள்ள இவ் உறுதி மொழி பல ஆளுகையை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட உறுதிமொழிகள் என்பதை IMF கண்காணிப்பான் வெளிப்படுத்துகிறது. தகவல்களை வெளியிடுவது தொடர்பான உறுதிமொழிகள் (வெளிப்படைத்தன்மை) மற்றும் ஆளுகையை மேம்படுத்தும் சட்டத்தை ஏற்றுக்கொள்வது தொடர்பான உறுதிமொழிகளும் இதில் அடங்கும்.


மோசமான ஆளுகையே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மையக் காரணி என்பதைச் சர்வதேச நாணய நிதியம் (IMF) அடையாளம் கண்டுள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையிலான ஆளுகை கண்டறியும் மதிப்பீட்டைக் கொண்ட முதல் ஆசிய நாடாக இலங்கை காணப்படுகிறது.

36% உறுதிமொழிகளின் நிலை ‘அறியப்படாத’ என வகைப்படுத்தப்பட்டுள்ளது, அதாவது அவற்றின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தரவு கிடைக்கவில்லை. பெப்ரவரி இறுதியில், 31% உறுதிமொழிகள் ‘நிறைவேற்றப்பட்டுள்ளன’.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாவது தவணைக்கான நிதி 2023 டிசம்பரில் வழங்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், இலங்கை பெப்ரவரி இறுதிக்குள் 45 உறுதி மொழிகளை நிறைவேற்ற வேண்டும். IMF கண்காணிப்பான் இவற்றில் 14ஐ (31%) ‘நிறைவேற்றப்பட்ட’ உறுதி மொழிகள் எனவும், 15ஐ (33%) ‘நிறைவேற்றப்படாத’ மற்றும் 16 ஐ (36%) ‘ அறியப்படாத’ உறுதிமொழிகள் என்றும் வகைப்படுத்தியுள்ளது.

“நிறைவேற்றப்படாத” 15 உறுதிமொழிகளில், ஆறு உறுதிமொழிகள் தகவல்களை வெளியிடுவது அல்லது வெளிப்படைத்தன்மை தொடர்பான உறுதிமொழிகளாகும். இவற்றில் நான்கு புதிய சட்டங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளாகும்:
(அ) வங்கிச் சட்டம் குறித்து பாராளுமன்ற ஒப்புதலைப் பெறுதல்;
(ஆ) பணவீக்கத்திற்கு ஏற்ப தானியங்கி முறையில் கலால் வரிகளைக் குறியீடு செய்வதை அறிமுகப்படுத்துதல்;
(இ) கடன் முகாமைத்துவ முகவர் நிலையமொன்றை அமைப்பதற்கு சட்டரீதியான மாற்றங்களை ஏற்படுத்துதல். (ஈ) அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

2022 செப்டம்பரில் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தில்




சேர்க்கப்பட்ட போதிலும், ஆளுகை தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த நான்கு நடவடிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

IMF கண்காணிப்பான் என்பது இலங்கையின் 17ஆவது சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் தொடக்கத்தில் இனங்காணப்பட்ட 100 உறுதிமொழிகளைக் கண்காணிக்கும் இலங்கையின் முதல் மற்றும் ஒரே தளமாகும். இதை வெரிட்டே ரிசர்ச்சின் manthri.lk இணையதளத்தினூடாக பொதுமக்கள் அணுகலாம்.

## “போக்கற்றவர்களே விமர்சிக்கின்றனர்”

கடலட்டை பண்ணைகள் தொடர்பாக சமூக ஆர்வலர்களாக தம்மை அடையாளப்படுத்துவோர் சிலர் அவ்வப்போது வெளியிடும் கருத்து தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எமது மாவட்டங்களில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி அந்தந்த பிரதேச மக்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்பும் நோக்ககோடு, விஞ்ஞான ஆய்வுகள் மூலம் சூழலியல் பாதுகாப்பை உறுதி செய்து மேற்கொள்ளப்படும் கடலட்டை பண்ணைகளை எழுந்தமானமாக விமர்சிப்பதன் மூலம் எமது மக்களுக்குத் துரோகம் இழைக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

## “புரியும் மொழியில் பதில்”

தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் மாற்றம் தேவையென்றால் அதற்குத் தயங்கப் போவதில்லை எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## எரிக் வோல்ஷ்டன் அனுரகுமார சந்திப்பு

மேலும் கனடாவில் வாழும் இலங்கையர்களைச் சந்திப்பதற்காக அனுரகுமார திஸாநாயக்க எதிர்காலத்தில் கனடாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

## “புதிய கிராம சேவகர்கள் நியமிக்கப்படுவர்”

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தை மக்கள் பாவனைக்காகத் திறந்துவைத்து உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்தும் பேசிய பிரதமர் தினேஸ் குணவர்தன மேலும் கூறியதாவது,

எமது நாடு பொருளாதார ரீதியாக கடும் நெருக்கடியை எதிர்நோக்கிய போதுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பெடுத்தார். இதன்போது அரச ஊழியர்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருவதாகப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் அரச ஊழியர்கள் அச்சமடைந்தனர்.

எனினும் ஜனாதிபதியின் ஆலோசனையில் விசேட வழிமுறைகளை உருவாக்கி அரச ஊழியர்களைக் குறைக்காமல், வரவு -செலவுத் திட்டத்தில் அவர்களுக்குக் கொடுப்பனவை அதிகரித்துக் கொடுத்தோம்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்க முடிவு எட்டப்பட்டுள்ளது. அதுபோல பாடசாலையில் கற்று முன்னோக்கி செல்ல முடியாத மாணவர்களுக்கு அவர்களின் திறமைக்கு ஏற்ப விசேட பயிற்சிகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகள் எல்லோருக்கும் தெரியும் அதனை நான் மீண்டும் ஞாபகப்படுத்த விரும்பவில்லை. எனினும் இப்போது அந்த பிரச்சினைகள் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளுடன் நட்பு ரீதியாகத் தொடர்புகளை ஏற்படுத்தி எமது நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தப் பல திட்டங்களை வகுத்து செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது நாட்டில் மாகாண சபை உறுப்பினர்கள் இல்லாமல் மாகாண ஆளுநர்களின் தலைமையில் மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாகாண ஆளுநர்களின் மேற்பார்வையில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராமங்களுக்கான பணிகளை முன்னெடுக்க மாவட்டச் செயலாளர்களும், பிரதேச செயலாளர்களும் அவர்களுக்குக் கீழ் பணியாற்றி வரும் அரச ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

புத்தளம் மாவட்டத்தில் அனைத்து வளங்களும் காணப்படுகின்றன. எனவே, அந்த வளங்களை மேலும் வலுப்படுத்த அனைவரும் பணியாற்ற வேண்டும்.

மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கு உரிய முறையில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக உரிய முறையில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முயற்சிக்க வேண்டும்.

எமது நாட்டில் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவையாளர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுகிறது. அவற்றை நிவர்த்திக்க நாம் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

இந்த மாதத்திற்குள் கிராம சேவகர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான நேர்முகத் தேர்வு இடம்பெறும் அதன் பின்னர், பற்றாக்குறையாக உள்ள அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் புதிதாகக் கிராம சேவகர்களை நியமிக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

## எரிக் வோல்ஷ்டன் அனுரகுமார சந்திப்பு

இலங்கையின் தற்போதைய சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய மக்கள் சக்தியின் திட்டங்கள் குறித்தும் இரு தரப்புக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மேலும் கனடாவில் வாழும் இலங்கையர்களைச் சந்திப்பதற்காக அனுரகுமார திஸாநாயக்க எதிர்காலத்தில் கனடாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

# “சொகுசுக்காக போராடவில்லை”






**நூருல் ஹுதா உமர்**

நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒரே நிறுவனத்தின் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகின்றது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது அப்பட்டமான உண்மை. இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் நாங்கள் தொடர் போராட்டம் ஒன்றுக்கு செல்வதைத்தவிர வேறு வழியில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், செவ்வாய்க்கிழமை (12) நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பித்த திடீர் போராட்டம் புதன்கிழமை (13) வரை அடையாள வேலை நிறுத்தம், நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போதே எம்.ரி.எம். தாஜுடீன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்விசார ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தலைமையிலும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற இப் போராட்டத்தின் இரண்டாம் நாளிலும் பெரும் அளவிலான ஊழியர்கள் பங்கு கொண்டிருந்துள்ளனர்.

இப்போராட்டத்தில் வாக்களிக்கப்பட்ட 107% சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25% MCA கொடுப்பனவை வழங்கு என்பனபோன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வை தர வேண்டும் என கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளன.








## நடமாடும் சேவை

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாதோருக்கு காலங்கடந்த பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடமாடும் சேவையானது, மூதூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இ.பிரசாந்தன் தலைமையில் மூதூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்றுள்ளது.
இதில், திருகோணமலை மாவட்ட பதிவாளர் எச்.எம். எச்.சமன் குமார, நிருவாக உத்தியோகத்தர் ஏ.அலாவுதீன் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதியினர் ஆகியோர் கலந்துகொண்டு பொது மக்களுக்கான உரியத் தீர்வினை பெற்றுக்கொடுத்தனர். இதற்கு ஒபர் அமைப்பு அனுசரணை வழங்கியிருந்தது.

# தோட்ட முகாமையாளர்கள் இருவருக்கு விளக்கமறியல்

**ஆ.ரமேஸ்**

நுவரெலியா-லபுக்கலை பம்பரகலை தோட்டத்தில் தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் நுவரெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தோட்ட முகாமையாளர்கள் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான உத்தரவு, நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் பிரபுதிகா லங்கான்தினி செவ்வாய்க்கிழமை (12) மாலை பிறப்பித்துள்ளார்.

நுவரெலியா பம்பரகலை தோட்டத்தில் கள உத்தியோகத்தர் ஒருவருக்கும் தோட்ட முகாமையாளர் இருவருக்கும் இடையில் கடந்த (28.02.2024) தொழில் ரீதியாக வாக்குவாதம் ஏற்பட்டு பின் கைகலப்பில் முடிந்துள்ளது.

இந்த சம்பவத்தில் தோட்டத் தேயிலை காணிகளுக்கு விசிரும் வழங்கப்பட்ட மருந்தை மீதம் வைத்தமையால் கள உத்தியோகஸ்தரை தோட்ட முகாமையாளர் தகாத வார்த்தையால் பேசியுள்ளார். விடயத்தைக் கேள்வியுற்ற,



கள உத்தியோகஸ்தரின் மகனும் வந்து, முகாமையாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதன்பின்னர் தோட்ட முகாமையாளரை தாக்கியுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாகத் தோட்ட முகாமையாளர் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து கள உத்தியோகஸ்தர் மற்றும் அவரின் மகனைக் கைது செய்த பொலிஸார், அவர்களை நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் பிரபுதிகா லங்கான்தினி முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களான தந்தை மற்றும் மகனை ஏழு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கவும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த (07.03.2024) அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது, தந்தையும் மகனும், ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

பிணையில் விடுதலையான இருவரும், முகாமையாளர்கள் இருவருக்கு எதிராக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்களின் முறைப்பாட்டை ஏற்ற பொலிஸார் தாக்குதலில்

தோட்ட முகாமையாளர் இருவரை விசாரணைக்கு அழைத்து பின் இவர்களைக் கைது செய்து நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் பிரபுதிகா லங்கான்தினி முன்னிலையில் (12.03.2024) மாலை ஆஜர்படுத்தியுள்ளனர்.

வழக்கை விசாரித்த நீதவான் தோட்ட முகாமையாளர் இருவரையும் எதிர்வரும் (18.03.2024) வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

### பிள்ளையை விட்டுவிட்டு

# பறக்க முயன்ற சீன தாய் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகைதரும் முனையத்தில், சீனப் பெண்ணொருவர் தன்னுடைய இளைய பெண் பிள்ளையை, இதுவரை காலமும் கவனித்துக்கொண்ட இலங்கை பெண்ணிடம் கொடுத்துவிட்டு, தப்பியோடுவதற்கு முயன்றபோது கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரினால் செவ்வாய்க்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதான சீனப் பெண், தன்னுடைய 58 வயதான தாயுடன், டுபாயில் வாடகை வீடொன்றில் வசித்து வந்துள்ளார். இந்த சீனப் பெண், பிரபலமான விடுதிகளில் நடனமாடும் நடனக் கலைஞர் என கூறப்படுகின்றது.

அவருக்கு 3 மற்றும் 6 வயதுகளில் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். தன்னுடைய சீனத் தாயை விட அதிகமாக நேசித்ததால் தன்னைப் பராமரிக்கும் இலங்கைப் பணிப்பெண்ணிடம், அவ்விரு பிள்ளைகளும் மிகுந்த பாசம் காட்டியுள்ளனர்.

இந்த பணிப்பெண், குருநாகல் - பொல்கஹவெல, பொத்துஹெரவில் வசிக்கும் 53 வயதுடையவர் ஆவார். அவர், சிங்கப்பூரில் பணிப்பெண் சேவையை முடித்துக்கொண்டு அண்மையில் இலங்கைக்கு திரும்பியுள்ளார்.

பணிப் பெண்ணின் பிரிவால் அவ்விரு பிள்ளைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், இது தொடர்பில் அக்கம் பக்கத்தினர் தெரிந்து கொள்ளாத வகையில் அந்த சீனப் பெண் நடந்து கொண்டுள்ளார்.

இதுதொடர்பில் எதனையும் கூறாத சீனப் பெண், இலங்கை பணிப் பெண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தி, தான் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள வருகை தர உள்ளதாகவும், தங்களை அழைத்துச் செல்ல கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தருமாறும் அழைத்துள்ளார்.

அதனடிப்படையில் அவர்களை வரவேற்பதற்காக, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு பணிப் பெண் சென்றுள்ளார்.

சீனப் பெண், தன்னுடைய தாய் மற்றும் இரண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு, டுபாயில் இருந்து வருகைதந்த பிளைய் டுபாய் (flydubai) விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை திங்கட்கிழமை (11) இரவு 10.30 மணியளவில் வந்தடைந்தனர். அங்கு அவர்கள் சந்தித்துக்கொண்டனர். சில மணிநேரம் அன்பை பகிர்ந்து கொண்ட சீனப் பெண், தன்னுடைய சிறிய குழந்தையை இலங்கை பணிப் பெண்ணிடம் ஒப்படைத்து விட்டு தலைமறைவாகி விட்டார். இந்த சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பொலிஸாரின் கவனத்துக்கு இலங்கை பெண் கொண்டு சென்றுள்ளார்.

இலங்கை பணிப் பெண்ணும், சீன பிள்ளையும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், டுபாய் நோக்கி பயணிப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த சீனப் பெண்ணும் அவருடைய தாயாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவ்விருவரையும் நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# உண்டியலை உடைத்த இரண்டு பெண்கள் கைது

கொழும்பு- புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக உள்ள பூர்வாரம போதிமலு விகாரையில் புதன்கிழமை (13) மதியம் 12.50 மணியளவில் உண்டியலை உடைத்து பணத்தை திருடிய குற்றச்சாட்டில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்திற்கு முன்பாக போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த வாழைத்தோட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபர்களான பெண்கள் இருவரையும் கைது செய்து வாழைத்தோட்ட பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விகாரைக்குள் நுழைந்த பெண், உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தை பொதிசெய்து, மற்றுமொரு பெண்ணிடம் கொடுத்ததாக நேரில் பார்த்தவர் கூறியுள்ளார்.

# துப்பாக்கி வெடிப்பில் ஒருவர் பலி

**எச்.எம்.எம்.பர்ஸான்**

துப்பாக்கி வெடிப்புச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஓட்டமாவடி - மஜ்மா நகர் பகுதியில் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நண்பர்கள் இருவர் வேட்டைக்கு சென்றபோது அவர்கள் பயன்படுத்திய வேட்டைத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

ஓட்டமாவடி - நாவலடி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இம்தியாஸ் எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், அவருடன் வேட்டைக்குச் சென்ற நபர் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வேட்டையாட சென்றவர் மரணம்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு-வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சூடுபத்தினசேனை காட்டை அண்டிய பகுதியில் துப்பாக்கி வெடித்து ஒருவர் உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (12) மாலை இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை-செம்மன்ஓடையைச் சேர்ந்த 32 வயதுடைய அத்துல் காதர் இம்தியாஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் அவரது நண்பருடன் இரவு உணவுக்காகக் கொக்கு இறைச்சியை கொண்டுவருவதற்காக, வீட்டிலிருந்து அரச அனுமதி பெற்ற சொட்கண் துப்பாக்கியுடன் வேட்டையாட சென்றுள்ளதுடன், கொக்குகளை குறிபார்த்துச் சுட எத்தனித்தபோது துப்பாகி வெடித்து, கழுத்துப் பகுதியில் குண்டு பாய்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில்



தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அவருடன் கூடச் சென்றவர் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுத்துள்ளதுடன், நீதிமன்ற அனுமதியை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


### யாழில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட

# இருவருக்கு தண்டம்

**யது பாஸ்கரன்**

யாழ்ப்பாணம்- உடுத்துறை கடற் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரண்டு குற்றவாளிகளுக்குக் கிளிநொச்சி மேல் நீதிமன்றம், தலா 1,50,000 ரூபாய் தண்ட பணம் விதித்துள்ளது.

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுத்துறை பகுதியில் மீன்பிடி படகு ஒன்றில் வைத்து 11 கிலோ 95 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு நடைபெற்று வந்துள்ளது.



குறித்த வழக்கிற்கான தீர்ப்பு செவ்வாய்க்கிழமை (12) கிளிநொச்சி மேல் நீதிமன்றில் நீதிபதி ஏ.எம்.எம்.ஸகாப்தீன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டு இரு சந்தேக நபர்களுக்கும் தலா 1,50,000 ரூபாய் வீதம் மூன்று இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

### சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்:

# 52 வயதானவருக்கு கடூழிய சிறை

**ஆ.ரமேஸ்**

நானுஓயா பொலிஸ் பிரதேசத்தில் பாடசாலை மாணவியான சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 52 வயதான நபரை குற்றவாளியாக இனங்கண்ட நுவரெலியா மேல் நீதிமன்றம், அவருக்கு 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரிய இந்த தீர்ப்பை புதன்கிழமை (13) வழங்கியுள்ளார்.

நானு ஓயா பிரதேசத்தை சேர்ந்த சந்தேகநபர், அதே பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுக்கு குறைவான பாடசாலை சிறுமி ஒருவரை 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பாடசாலை ஊடாக சிறுமியின் பெற்றோருக்கு தெரியவந்ததையடுத்து குறித்த நபருக்கு எதிராக நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான வழக்கு விசாரணை நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபருக்கு எதிரான சாட்சியங்களின் அடிப்படையில் 52 வயதான நபர் நீதிமன்றத்தின் ஊடாக குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

அதேநேரத்தில், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐந்து இலட்சம் ரூபாய் நஷ்டஈடாக வழங்க வேண்டுமென தீர்ப்பு வழங்கிய நீதிபதி இந்த தொகையை வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குற்றவாளி நீதிமன்ற தண்ட பணமாக 15 ஆயிரம் ரூபாய் செலுத்த உத்தரவிட்ட நீதிபதி இந்த தண்டனை பணத்தை செலுத்தாத பட்சத்தில் மேலும் மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்துள்ளார்.

# திறந்தவெளி அரங்குகளை தவிர்ப்பதே தற்போதைக்கு சிறந்தது

அடைமழை ஓய்ந்ததன் பின்னர், வெளியில் உச்சந்தலையைப் பிளக்கும் அளவுக்குக் கடுமையாக அடித்துக்கொண்டிருக்கின்றது. சாதாரணமாக பகல் வேளைகளில் வெளியில் செல்லமுடியாத அளவுக்கு அனல்போன்று இருக்கின்றது. அந்தளவுக்கு வெளியில் தாக்கம் உள்ளது.

வீதியில் சென்று கொண்டிருந்தவர் மயங்கி விழுந்து மரணம், பாடசாலைகளில் காலை கூட்டத்தில் நின்றிருந்த மாணவி மரணம், நின்றுகொண்டிருந்தவர் மரணம், பொது இடத்தில் அமர்ந்திருந்தவர் மரணம் என, வெயிலின் தாக்கத்தின் பின்னரான மரணங்கள் தொடர்பிலான செய்திகள் அதிகரித்துள்ளன.

இதற்கிடையே, மரதன் ஓடிய மாணவன் மரணமடைந்த சம்பவம் கிழக்கு மாகாணத்தில், திருகோவிலில் இடம்பெற்றுள்ளது. பாதிப்படைந்த மாணவனை உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டுச் சேர்த்த போதிலும், வைத்தியசாலையின் அசட்டையால் மாணவனின் மரணம் சம்பவித்துள்ளதென மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனினும், விசாரணைக்குப் பின்னரே உண்மை வெளியாகும்.

ஒவ்வொரு சம்பவங்களுக்குப் பின்னரும் விசாரணைகளை முன்னெடுத்து உண்மை கண்டறியப்பட்டாலும், எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் எவ்விதமான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. இது கவலைக்குரிய விடயங்களாகும். ஆக, கற்றறிந்த பாடங்கள் பயனற்று போகின்றன என்பதே வெளிப்படையாகும்.

இந்நிலையில், திறந்த வெளிகளில் மாணவர்களை ஆகக்கூடுதலான நேரங்கள் காத்திருக்க விடவேண்டாம் என்றும், மைதானங்களில் மாணவர்களை வைத்திருக்கவேண்டாம் என்றும் கல்வியமைச்சு பணித்துள்ளது. அதனை ஒவ்வொரு பாடசாலைகளும் பின்பற்றவேண்டும். அதனூடாக வெயிலினால் பாதிக்கப்படுவதில் இருந்து மாணவர்களைக் காப்பாற்றலாம்.

இந்த காலத்தில், கடுமையான தாகம் ஏற்படும். பல பாடசாலைகளில் குடிநீருக்கு வசதி இருக்காது. பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையிலான தூரம், நீண்டதாக இருக்கும். அவ்வாறான மாணவர்கள், தங்களுக்குத் தேவையான நீராகாரங்களை எடுத்துச்செல்வது அவசியம். உடலுக்குத் தேவையான நீரை அவ்வப்போது அருந்த வேண்டும். இல்லையேல், உடல் வறட்சி ஏற்படும்.

வறட்சியான காலநிலையின் தாக்கம் கடுமையாகக் குறைவடையும் வரையிலும் பாடசாலைகளில் இல்லங்களுக்கு இடையில் மெய்வல்லுநர் போட்டிகள் நடத்துவதை முழுமையாக நிறுத்திவைப்பது சாலச் சிறந்தது. இல்லையேல், பாடசாலைக்கும் மைதானத்துக்குச் சென்று வரும்போதே, மாணவர்கள் களைப்படைந்து விடுவர். அதுமட்டுமன்றி, மைதானங்களில் திறந்தவெளியில் நீண்டநேரம் காத்திருப்பதன் ஊடாகவும் பாதிக்கப்பட்டு விடுவர்.

இந்த காலகட்டத்தில், நீர்நிலைகள், குளங்கள் வற்றிவிடும், நீரூற்றுகள் வரண்டுவிடும், சின்னஞ்சிறிய விலங்குகள் உட்பட, மிருகங்கள் நீரின்றி கடுமையான சிரமங்களுக்கு உள்ளாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சிறிய காடுகள் மற்றும் பற்றைகளுக்கு தீ மூட்டும் விஷமிகள், மிருகங்களை வேட்டையாடிவிடுவர்.

வறட்சியான காலங்களில் காடுகளுக்கு தீ மூட்டுவதன் ஊடாக, மழைபெய்யும் என்ற பிற்போக்குத்தனமான சிந்தனையைக் கைவிட்டு, இருக்கும் காடுகளைக் காப்பாற்றுவதற்கும் காட்டுத் தீ பரவாமல் இருப்பதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்த வேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து உருகிக்கொண்டிருக்கும் அல்லது புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள். அல்லது, தங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் ஆலோசனை செய்வார்கள். ஆனால், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, சிலர் தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள். இது அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லும்.

எந்தவொரு மனிதனின் மனநிலையும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், ஏதோ விதமாக வரும் சின்னச்சின்னப் பிரச்சினைகள் வரலாம்; அவை எவற்றையும் ஊதிப்பெருப்பிப்பது அறிவீனம்.

சுலபமாகக் கிடைக்கும், உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல; வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஷ்டங்களை அனுபவித்து, அதிலிருந்து மீண்டவர்களாகவே இருப்பார்கள்.

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எது நடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

நன்றி: பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஏகமனதான தெரிவின் மீதான நம்பிக்கையின்மை

முருகாநந்தன் தவம்

பாராளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்றும்போது, மேற்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரித்துரைகளை சரியாக அமுல்படுத்தாமை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறியமை, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்கப்பட்ட நிலையில் விரைவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பாராளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் 05-03-2024 அன்று கையளிக்கப்பட்டுள்ள இந்த சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 44 எம்.பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் இதுவரையில் 11 சபாநாயகர்கள் பதவி வகித்த நிலையில் 9ஆவது பாராளுமன்றத்தின் 11ஆவது சபாநாயகராக 2020 ஒகஸ்ட் 20ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டு இற்றைவரை மஹிந்த யாப்பா அபேவர்தன அப்பதவியில் இருந்து வருகின்றார். இன்று எதிர்க்கட்சிகளினால் கடுமையாகக் குற்றஞ்சாட்டப்படும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன போட்டியிட்டு சபாநாயகராக தெரிவாகவில்லை. மாறாக அரசு மற்றும் எதிர்க்கட்சிகளினால் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு 2020 ஒகஸ்ட் 20 ஆரம்பமானபோது, சபாநாயகரைத் தெரிவு செய்யும் விதமாக மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை புதிய சபாநாயகர் பதவிக்கு அப்போதைய சபை முதல்வரான தினேஷ் குணவர்தன முன்மொழிந்தார். அதனைப் பிரதான எதிர்க்கட்சியாகவிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலரான ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. வழிமொழிந்த நிலையிலேயே மஹிந்த யாப்பா அபேவர்தன போட்டியின்றி ஏகமானதாக சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவ்வாறு ஏகமனதாகத் தெரிவான சபாநாயகரே இன்று அதிக சர்ச்சைகளுக்குள்ளும் எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனங்கள், கண்டனங்களுக்குள்ளும் சிக்கியவராகவும் அரசு சார்பாக மட்டும் செயற்படுபவர், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள், வியாக்கியானங்களைக்கூட, புறந்தள்ளிச் செயற்படுபவர் என்ற குற்றச்சாட்டைச் சுமப்பவராகவும் உள்ளார்.

இவ்வாறான நிலையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய சுயாதீன எதிரணி எம்.பியுமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இந்த பிரேரணை இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் சபாநாயகர் ஒருவருக்கு எதிராக முதன்முதலாக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை எனத் தெரிவித்திருந்தார். ஆனால், அது தவறு. ஏற்கெனவே பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையில் சபாநாயகராகவிருந்த ஒருவருக்கும் அதன் பின்னரான பாராளுமன்றத்தின் சபாநாயகர்களாகவிருந்த 3 பேருக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

முதன்முதலில் 1963-11-22ஆம் திகதி பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையில் ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டபோது, ஆதரவாக 61 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில், எதிராக 68 வாக்குகள் அளிக்கப்பட்டு, 7 மேலதிக வாக்குகளினால் நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. அதன்பின்னர் முதலாவது பாராளுமன்றத்தில் 1980-12-23ஆம் திகதியும் இரண்டாவது பாராளுமன்றத்தில் 1990-10-10ஆம் திகதியும் 1992-06-09ஆம் திகதியும் அப்போதைய சபாநாயகர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டபோதும், அவை முறையே 126 மேலதிக வாக்குகளினாலும் 38 மேலதிக வாக்குகளினாலும் 50 மேலதிக வாக்குகளினாலும் தோற்கடிக்கப்பட்ட வரலாறு உண்டு. ஆகவே, 9ஆவது பாராளுமன்றத்தின் 11ஆவது சபாநாயகராக 2020 ஒகஸ்ட் 20ஆம் திகதி அரச, எதிர்க்கட்சிகளினால் ஏகமானதாகத் தெரிவுசெய்யப்பட்டு இற்றைவரை சபாநாயகராக உள்ள மஹிந்த யாப்பா அபேவர்தன இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொண்ட 5ஆவது சபாநாயகராகவுள்ளார். அவ்வாறு ஏகமனதாகத் தெரிவான சபாநாயகரே இன்று எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் நாட்டுக்கு எதிராகவும் அரசியலமைப்புக்களை மீறிச் செயற்படுவதாகவும் எதிர்க்கட்சிகளினாலும் மனித உரிமைகள் அமைப்புக்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளினாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றார்.

நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தைப் பொறுத்தவரையில், 9 சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு முரணாகச் சபாநாயகர் செயற்பட்டுள்ளார். அரசியலமைப்பின் 123 (4) இன் பிரகாரம், ஏதேனும் சட்டமூலம் அல்லது ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு ஒவ்வாததாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற விடத்து, அல்லது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அல்லது அத்தகைய ஏற்பாடு உயர்நீதிமன்றத்தின் தீர்மானிப்பில் கூறப்பட்டுள்ள முறையில் தவிர, நிறைவேற்றப்படுதல் ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகள் மூலம் இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், அதனைச் சபாநாயகர் புறந்தள்ளிவிட்டார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் கூட, நாட்டின் உயரிய சட்டத்தை மறந்துவிட்டு தம் இஷ்டம் போல சபாநாயகர் நடந்து கொண்டுள்ளார். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது சிரமமான விடயம் என்பதனால் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் நோக்கில் அரசியலமைப்பு பேரவை உருவாக்கப்பட்டது. இங்கு ஜனாதிபதியால் முன்மொழியப்படும் பெயரை அங்கீகரிக்கவும் நிராகரிக்கவும் பேரவையின் 5 வாக்குகள் தேவை. ஆனால், பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் போது சபாநாயகர் அதனை மீறி விட்டார். பொலிஸ் மா அதிபர் நியமனத்திற்கு 4 பேர் ஆதரவாகவும் 2 பேர் எதிராகவும் 2 பேர் வாக்களிக்காமலும் இருந்தனர். சபாநாயகர் தனது அறுதியிடும் வாக்கை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி பொலிஸ் மா அதிபரை நியமித்தார். அதாவது அரசியலமைப்பு பேரவையின் கூட்டம் முடிந்து வீட்டுக்குச் சென்றதன் பின்னர் சபாநாயகர் 'புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் இரண்டு உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆகவே, அவர்கள் குறித்த முன்மொழிவுக்கு எதிராக வாக்களித்துள்ளதாகக் கருதி எனது தீர்மானமிக்க வாக்கினை வழங்குவதாக 'ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார். இது முற்றிலும் அரசியலமைப்புக்கும், அரசியலமைப்பு பேரவையின் வழிமுறைகளுக்கும் எதிரானது என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

இவ்வாறான நிலையில்தான், நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற்றும்போது, மேற்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரிந்துரைகளைச் சபாநாயகர் சரியாக அமுல்படுத்தாமை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் சபாநாயகர் அரசியலமைப்பை மீறியமை, அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் சிறப்புரிமைகளை மீறுதல் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்துள்ளன.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கூறுகையில், நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உயர் நீதிமன்றத்தின் கட்டளையைப் புறக்கணிக்கவில்லை, அரசமைப்பை மீறவில்லை, பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறவில்லை. அதனால் பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கு அஞ்சி என் பதவியை இராஜிநாமா செய்யமாட்டேன். எவருக்கும் பயந்து ஓடவும் மாட்டேன். நான் பாராளுமன்றத்தில் நடுநிலையுடன் செயற்படுகின்றேன். எனவே, எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நீதியின் பக்கம் நிற்கும் எம்.பிக்களால் தோற்கடிக்கப்பட்டே தீரும் என்று சூளுரைத்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுவதுபோல் நிகழ்நிலை காப்பு சட்டம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கு முரணாகச் சபாநாயகரினால் நிறைவேற்றப்பட்டிருந்தால் அதன் விளைவுகளைப் பொதுமக்களும் பொது அமைப்புக்களும், சமூக நீதிக்காக, நியாயத்துக்காகப் போராடுவோரும் சமூக ஊடகப் போராளிகளும் அரசை விமர்சிப்போருமே எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். அடுத்து அரசினால் நிறைவேற்றப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்றவும் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன், இன்னும் பல பரிந்துரைகளை, வியாக்கியானங்களையும் முன்வைத்துள்ளது. நிகழ்நிலை காப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டமை அரசியலமைப்புக்கு முரண், புதிய பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறி சபாநாயகர் செயற்பட்டார் என எதிர்க்கட்சிகளினால் கொண்டுவரப்பட்டுள்ள சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 'அரசியல் பார்வை'யில் பார்த்து வாக்களித்தால் நிகழ்நிலை காப்பு சட்டத்தைப்போன்றே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமும் உயர் நீதிமன்ற தீர்ப்பு, பரிந்துரையை மீறி நிறைவேற்றப்படலாம்

ஆகவே, இந்த விடயத்தில் அரசியல் என்பதற்கு அப்பால் அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளைச் சபாநாயகர் மீறுதல் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் சிந்தித்து இந்த நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பான வாக்களிப்பில் வாக்களிக்க வேண்டும். இல்லாது விட்டால் சபாநாயகர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைகள் தோற்கடிக்கப்பட்ட வரலாறே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை வாக்களிப்பிலும் தொடரும்.

## கடிதங்கள்

### மணி எத்தனை?

ஹட்டன் நகர மையத்தில் நிர்மாணிக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரம் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாகப் பழுதடைந்துள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தைப் புனரமைக்காது, இடித்துவிட்டு வேறு மணிக்கூட்டுக் கோபுரத்தை அமைப்பது தொடர்பாகப் பல தரப்பினர் தெரிவித்திருந்ததாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில், நீர்வள முகாமைத்துவ அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஒரு தொகை பணத்தை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரங்கள் உரிய பணம் கிடைக்கும் வரை புனரமைக்கப்பட மாட்டாது எனவும், பணம் கிடைத்த பின்னர் புதிய மணிக்கூட்டுக் கோபுர நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

– சுதத் எச்.எம்.ஹேவா



# தொழில்நுட்ப மேலெழுகையின் அடுத்த பாய்ச்சல்

**நேர்கண்டவர்: ஏ.கே.இந்திரன்**

யாழ்ப்பாணத்தை ஒரு சிலிக்கன் பள்ளத்தாக்காக உருமாற்றும் நோக்குடன் இலங்கையில் தனது பணியைத் தொடங்குகிறது யுனிக்கொம் டிக் நிறுவனம். தகவல் தொழில்நுட்பத்துறையில் தொழில் தயார் பொறியியலாளர்களை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு தமது முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தை இம்மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அவர்கள் தொடங்குகிறார்கள். 100 மில்லியன் இலங்கை ரூபாய் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்படும் இந்நிகழ்ச்சித் திட்டம் பத்தாண்டுகளில் 10,000 மென்பொருள் பொறியியலாளர்களை உருவாக்கித் தொழில்வழங்கும் நோக்கத்தைக் கொண்டது. இந்தப் பணியை மேற்கொண்டுள்ள இந்நிறுவனத்தின் இரண்டு இணை நிறுவனர்களான டபிள்யு. சாந்தரூபன் மற்றும் நீல் அந்தோனிப்பிள்ளை ஆகியோரை நேர்கண்டோம்.



**கேள்வி: இவ்வாறான ஒரு முயற்சியை நீங்கள் மேற்கொள்வதன் நோக்கம் என்ன?**

பதில்: நாம் இருவரும் இலங்கையில் கல்வி கற்று மேற்படிப்புக்கான இங்கிலாந்துக்குச் சென்றவர்கள். தகவல் தொழில்நுட்பத் துறையில் கூட்டாக 80 ஆண்டுகால அனுபவம் எமக்குண்டு. பாடசாலைக் காலத்திலேயே நாம் பொதுச்சேவைகள் பலவற்றைச் செய்தவர்கள். அதற்கு எங்கள் ஆசிரியர்கள் வழிகாட்டியாக இருந்தார்கள். இன்று நாம் எமது சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் பங்களிக்க விரும்புகிறோம். அவ்வகையில் தகவல் தொழில்நுட்பத் துறைசார்ந்த வேலையாட்களை உருவாக்குவதன் ஊடு தொழிற்றுறைக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் பங்களிக்க முடியும் என நாம் நம்புகிறோம். அதனாலேயே தொழிற்றுறைக்குத் தயார் நிலையில் உள்ள மென்பொருள் பொறியியலாளர்களை உருவாக்க முனைகின்றோம். இன்று பல்கலைக்கழகங்களில் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் மட்டுமே தொழில்நுட்பக் கல்வியைக் கற்க முடியும். பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத அதேவேளை, தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பதற்கான பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கான வாய்ப்பை நாம் வழங்க முனைகிறோம். இதன்மூலம் திறமையானவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கான வாயில்களைத் திறந்து விடுகிறோம்.

**கேள்வி: உங்களது இந்த கற்கைநெறியில் எவ்வாறு இணைந்து கொள்வது?**

பதில்: இது அனைவருக்குமானது. எமது அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் எவரும் இதில் இணைந்துகொள்ள முடியும். இதற்கு மூன்று அடிப்படைத் தகுதிகள் உண்டு. முதலாவது, விண்ணபதாரி 17 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். 17 வயதுக்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம். இரண்டாவது, கணினி மற்றும் தகவல்தொழில்நுட்பம் தொடர்பான விருப்பமும் அது தொடர்பான ஆர்வமும் இருக்க வேண்டும். இது முதன்மையானது. ஏனெனில் இதில் ஆர்வமில்லாத பலர் இன்று மென்பொருள் பொறியியலாளராக இருக்கிறார்கள். அவர்களால் வினைத்திறனாக செயலாற்ற முடிவதில்லை. இதை நாம் எமது அனுபவத்தில் கண்டுள்ளோம். மூன்றாவது தர்க்கரீதியாகச் சிந்திக்கக் கூடியவராக இருக்க வேண்டும். எம்மைப் பொறுத்தவரையில் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் திறன் என்பது அடிப்படையானது. ஏனெனில் தர்க்கரீதியாகச் சிந்திக்கத் தெரியாத ஒருவரால் சிறந்த மென்பொருள் பொறியியலாளராக வர இயலாது. நன்றாகக் கற்கக்கூடிய ஒருவர் தர்க்கரீதியாகச் சிந்திப்பவராக இருக்க வேண்டியதில்லை. அதேபோல தர்க்கரீதியாகச் சிந்திக்கக்கூடிய ஒருவர் சிறப்பாகக் கல்வி கற்பவராக இருப்பார் என எதிர்பார்க்க முடியாது. நாம் தொழிற்றுறையில் உடனடியாக இணையக்கூடியவர்களையே உருவாக்க விரும்புகிறோம். அதன் அடிப்படையிலேயே இந்த மூன்று அடிப்படைத் தகுதிகளையும் கோருகிறோம்.

இந்த மூன்றும் இருக்கும் பட்சத்தில் எமது கற்கையில் இணைந்து கொள்ளமுடியும். தெரிவை நாம் நான்கு கட்டங்களாச் செய்கிறோம். முதற்கட்டமாக, இதில் இணைவதற்கு ஒன்லைன் மூலம பதிவு செய்தவர்களுக்கு ஒரு விண்ணப்பப் படிவம் அனுப்பப்படும். அது விண்ணப்பதாரர்களின் தர்க்க ரீதியான திறன், தொழில்நுட்பத்தின் மீதான நாட்டம் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும். இரண்டாம் கட்டமாக, இந்த மதிப்பீட்டில் கூடிய புள்ளிகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் ஒரு பயிற்சிப் பட்டறைக்கு அழைக்கப்படுவர். அதில் ஒவ்வொருவரும் நேர்காணப்படுவர். இந்தப் பட்டறை வடக்கு, கிழக்கு முழுவதிலும் நடைபெறும். பட்டறையினதும் நேர்காணலதும் நிறைவில் கற்கை நெறிக்கான மாணவர் தேர்வு செய்யப்படுவார்கள். மூன்றாங் கட்டமாக, இவ்வாறு தேர்வானோருக்கு 100 சதவீதம் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு 9 மாதக் கற்கைநெறி நடைபெறும். யாழ்ப்பாணத்தில் உள்ள எமது புத்தாக்க மையத்தில் வகுப்புகள் நடைபெறும். நான்காவதும் இறுதிக் கட்டமாக, சித்தியெய்தியோருக்கு சான்றிதழும் வேலைவாய்ப்பும் வழங்கப்படும். சித்தியெய்தாவர்களுக்கு கற்கை நெறியை நிறைவுசெய்ய மேலதிக இரண்டு மாதங்கள் வழங்கப்படும். அக்காலப்பகுதியில் அவர்களுக்குக் கற்பித்தல் உதவிகள் வழங்கப்பட்டு கற்கையை நிறைவுசெய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும்

**கேள்வி: உங்கள் பாடநெறி எவ்வாறானதாக இருக்கிறது?**

பதில்: எங்கள் பாடநெறியானது நான்கு அடிப்படைகளைக் கொண்டதாகும். முதலாவது, தொழில் தயார் திறன்களை விருத்தி செய்தல்;. இன்றைய கணினி யுகத்தில் தேவையான அறிவு என்பது கற்கையை நிறைவுசெய்து வெளியேறும் ஒருவர், தொழிலுக்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதே. ஆனால், இன்று கணினி கல்விக்கும் தொழில் தயார் நிலைக்கும் இடையில் பாரிய இடைவெளி உண்டு. அதை எமது கடந்த நாற்பதாண்டுகால அனுபவம் உணர்த்தியுள்ளது. அவ்வகையில், தொழில் தயார் உடையவர்களையே நாம் உருவாக்க விளைகிறோம். இன்று சந்தை வேண்டுவது தொழில் தயார் நிலையில் இருக்கின்ற மென்பொருள் பொறியியலாளர்களையே.

இரண்டாவது, எமது கற்பித்தலானது சில ஆண்டுகள் நீள்கின்ற ஒன்றாக இல்லாமல் 9 மாதங்களில் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுவதற்குத் தயார் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 9 மாதங்களுக்குள், தொழில்நுட்பத் துறையில் செழிக்கத் தேவையான திறன்களையும் அறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் எங்கள் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கற்பித்தலில் உள்நாட்டு வெளிநாட்டு வளவாளர்கள் கற்பிக்கிறார்கள்.

மூன்றாவது நாம் தெரிவுசெய்யும் மாணவர்களுக்கு 100 சதவீதம் புலமைப்பரிசில்களை வழங்குகிறோம். அதாவது நாம் இலவசமாகவே இந்த கற்கை நெறியை வழங்குகிறோம். பொருளாதார அடிப்படையில் நோக்கும் போது, ஒரு மாணவருக்கான மொத்த பாடநெறிக்கான செலவு 925,000 இலங்கை ரூபாய்கள். நாம் முதற்கட்டமாக 100 மில்லியன் இலங்கை ரூபாய்களை நாம் செலவிடுவதற்குத் தயாராகவுள்ளோம். எனவே மாணவர்கள் இலவசமாக இணைந்து கல்விகற்பதற்கான வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நான்காவது, எமது கற்கை நெறியை நிறைவுசெய்யும் மாணவர்களுக்கு வேலை கிடைப்பது உறுதியானது. நா ஏற்கெனவே இதுசார் நிறுவனங்களுடன் பேசி வேலை வாய்ப்புக்கான உத்தரவாதத்தைப் பெற்றுள்ளோம். மென்பொருள் விருத்தித் துறையில் பணிசெய்யும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் நாங்கள் வலுவான உடன்படிக்கைகளை நிறுவியுள்ளோம். அது எமது மிகப்பெரிய பலமாகும்.

**கேள்வி: இம்முறை எத்தனை பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்?**

பதில்: இம்முறை நாடெங்கிலும் இருந்து 3500 விண்ணப்பங்கள் எமக்குக் கிடைத்தன. அவ்விண்ணப்பங்களில் இருந்து திறமைகளின் அடிப்படையில் 500 பேர் முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களுக்கான பட்டறையும் நேர்முகத் தேர்வும் நடாத்தப்பட்டது. இவற்றின் அடிப்படையில் இறுதியாக 100 தொடக்கம் 120 பேர் வரை தெரிவுசெய்யப்படுவர். அவர்கள் அனைவருக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். முதலில் சொன்னமாதிரி இக்கற்கை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. எனவே யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே இருந்து தெரியப்படும் மாணவர்களில் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள மாணவர்களுக்கு மேலதிக புலமைப்பரிசில்களும் வழங்கப்படும்.

**கேள்வி: உங்களது நீண்டகால நோக்கு என்ன?**

அடுத்த இருபது ஆண்டுகளுக்கு இதை முன்னெடுக்க நாம் யோசித்திருக்கிறோம். ஆகவே, ஆண்டொன்றும் ஆயிரம் பேர் வீதம் பத்தாண்டுகளில் பத்தாயிரம் மென்பொருள் பொறியியலாளர்களை உருவாக்குவதே எமது நோக்கம். நாம் உயர்தரமான பயிற்சிகள், புதுமைகள், தொழிற்றுறைக்குத் தேவையான மென்திறன்கள் அனைத்தையும் வழங்க உத்தேசித்திருக்கிறோம். எனவே, அளவறி ரீதியான மாற்றத்தை மட்டுமன்றி, பண்பறி ரீதியான மாற்றமும் நிகழும் என்று எதிர்பார்க்கிறோம். எமது யுனிகாம் டிக் ஒரு பயிற்சி மற்றும் புத்தாக்க மையம் மட்டுமல்ல. வாய்ப்புகள் நிறைந்த தொழில்நுட்பத்துறையில் எதிர்காலத்திற்கான நுழைவாயிலாகும். புலம்பெயர் தேசங்களிலிருந்து பலர் எம்மோடு இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறார்கள். எனவே, பல விடயங்களைச் செய்வதற்கான வாய்ப்பும் விருப்பும் பலரிடம் இருக்கிறது. அனைத்தும் இலங்கையினதும் குறிப்பாக வடபுலத்தினதும் வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

**கேள்வி: உங்களது இந்தத் திட்டமானது எவ்வாறு பிராந்திய மற்றும் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

பதில்: மிகப்பெரிய இளைய உற்பத்திச் சக்தி ஒன்று வடக்குக் கிழக்கில் உண்டு. அவர்களுக்கான வாய்ப்பை நாம் இங்கேயே ஏற்படுத்திக் கொடுக்கிறபோது அது பிராந்திய அபிவிருத்திக்குப் பங்களிக்கும். இது மூளைசாலிகள் வெளியேற்றத்தைக் குறைக்கும், வேலைவாய்ப்பை அதிகரிக்கும், புலம்பெயர்ந்து வாழ்வோர் திறன் சார் உதவிகளை வரன்முறையாக வழங்குவதற்கும் பங்களிப்பதற்கும் உதவும். இவை அனைத்தும் சேர்ந்து அது வடக்கு, கிழக்கின் பொருளாதார சமூக மாற்றத்திற்குப் பங்களிக்கும். தேசியப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில், தற்போதைய நிலையில் இன்று எமது கற்கை நெறியை நிறைவுசெய்து பணியில் சேரும் மென்பொருள் பொறியியலாளர் மாதம் ஒரு இலட்சம் ரூபாவை தனது தொடக்கச் சம்பளமாகப் பெறுகிறார். சில ஆண்டுகளில் அது ஐந்து இலட்சம் வரை உயர்கிறது. பத்தாண்டுகளில் நாம் 10,000 பேரை இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து சந்தைக்கு உருவாக்கினால் ஒரு மாதத்திற்கு 5,000 மில்லியன் ரூபாய்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்குள் பாய்ச்சப்படும். அது பொருளாதாரப் பெருக்கத்தின் அடிப்படையில் 20,000 மில்லியன் ரூபாய்க்குச் சமனானதாகும். இந்த முன்னோக்கு எமது பிரித்தானிய அனுபவத்தின் வழிப்பட்டதாகும். இதை நாம் சுழற்சிப் பொருளாதாரம் என்கிறோம். முதலில் பிராந்தியத்தில் சுழற்சியடைகின்ற பணமானது தேசியப் பொருளாதாரத்தில் சேர்கிறது. அதேவேளை, எமது வெற்றியானது இன்னும் பலருக்கு உத்வேகம் அளிக்கும். இது புதிய தொழிற்றுறைகளை உருவாக்கவும் பன்முகப்பட்ட தொழில் வாய்ப்புகளுக்கும் முதலீட்டுக்கும் வசதிப்படுத்தல்களை மேற்கொள்ளும். சிறுதுளி தானே பெருவெள்ளமாக மாறுவது.

# சொல்ல மறந்த காதல்



**மல்லிகை செந்தூரன்**

அதிகாலை மூன்று மணி இருக்கும் கோவில் மணியோசை ஊரெல்லாம் எழுப்புகின்றது. சுந்தரமும் கண்களை கசக்கி கொண்டு எழுந்து நேரத்தை பார்த்தான். வழமையாக மணி கேட்கும் நேரம் தான். இருந்தும் சட்டென்று படுக்கையை சுற்றி வைத்து காலை கடமைகளை முடித்த பின்பு அடுப்பங்கரைக்குச் சென்று சுவையான தேநீரை பருகி விட்டு நண்பனுடைய தொலைபேசிக்கு அழைப்பு எடுக்கிறான். 'நண்பா நான் சுந்தரம் பேசுகின்றேன், நேரம் காலை ஆறு மணி நம்ம ஆளு வரும் நேரம்டா' என்றான். ராமுவும் அதற்கு "உன்ர பைக்குக்கு பெட்ரோல் போட்டுட்டு வா... இருவரும் புறப்படுவோம்" என்றான். சுந்தரமும் ராமுவும் ஒரே ஊர் தான். இருந்தும் இருவர் விரும்பும் பிள்ளைகள் தூரத்து கிராமமாகும்.

சுந்தரமும் மெதுவாக கதவை திறந்து மோட்டார் சைக்கிளை உருட்டுகின்றான். உருட்டும் சத்தம் கேட்டதால் அரை தூக்கத்திலிருந்த தாயும் "சுந்தரம் எங்கடா போகின்றாய்" என்று தொனி எழுப்பினாள். தாயின் குரலை கேட்டு சுந்தரமும் "இல்லையம்மா... இன்று ராமுவின் பிறந்தநாளாம் நேரத்துக்கு வரட்டாம் அதான் போகிறேன்" என்றான். "ஓ அப்படியாடா... ஒவ்வொரு நாளும் அந்த குடும்பத்திற்கு பிறந்தநாள் தானா?" என்றதும் மெல்லிய சிரிப்புடன் மெதுவாக நகரத் தொடங்குகின்றான். வீதிகள் தோறும் நிழல் மரங்களால் நிரப்பப்பட்ட சோலைகளில் இருபக்க நெற்கதிர்காற்றை ரசித்தவாறு ராமுவின் வீட்டினை வந்தடைந்தான் சுந்தரம்.

முளிவளமே பிரமாதம் தான் ஒரு இளவயது பெண் வீட்டில் முற்றத்தை கூட்டிக்கொண்டு இருந்தாள் கையில் விளக்குமாறுடன் நிமிர்ந்த பார்வையுடன் சின்னதாய் புன்னகைத்து "வாருங்கள் அண்ணா..." என்று உள்ளே அழைத்தாள். அந்த சிரிப்புக்கு அர்த்தம் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அந்தப் பெண்ணை சந்தித்துதான் காதலியை பார்த்து செல்வானாம், அந்த அளவுக்கு நம்பிக்கை கொண்டிருந்தான். உள் நுழைந்த சுந்தரமும் இருக்கையில் அமர்ந்து கொண்டு கண்களால் ராமுவை தேடுகின்றான். "என்னப்பா காலையில வீட்டுக்கு வந்திருக்கிறாய்..." என்று உரத்த குரலுடன் ராமுவின் தாய் பங்கயம் வினவினாள். "கங்கைவெளியில் எங்களோட படித்த நண்பனுக்கு பிறந்தநாள் கொண்டாடுகின்றான் அதான் எங்கள நேரத்தோட வரட்டாம் ஆண்டி" என்றதும் ராமுவும் போக ஆயத்தமாகி வந்துவிட்டான். இருவரும் புறப்பட ஆரம்பித்தார்கள்.

மீண்டும் போகும் முன் அந்தப் பெண் முகத்திலே முழித்திட கண்களால் அங்கும் சுற்றிப் பார்த்தான் ஒரு மெல்லிய குரலுடன் "அண்ணா..." என்று அழைத்தாள், ராமுவும் சுந்தரமும் நிமிர்ந்து பார்த்தார்கள், ராமுவின் தங்கை சுமத்திரா தான் அழைத்தவாறு "உண்மையைச் சொல்லுங்கள், அம்மாவை ஏமாற்றி போற மாதிரி என்னையும் ஏமாற்றலாம் என்று நினைக்காதே, எனக்கு அண்ணி தானே பார்க்கப் போகின்றீர்கள்" என்றாள். ராமுவும் வெட்கப்பட்டு "சும்மா போடி..." என்றான். ராமு சுமத்திராவுக்கும் இரண்டு வயசு தான் வித்தியாசம். ராமுவின் ஒவ்வொரு அசைவுகளையும் நன்கறிந்தவள் தான் இந்த சுமத்திரா, சும்மா விடுவாளா நச்சென்று முகத்திலே அடித்தவாறு கேட்டுவிட்டாள். ராமுவுக்கு ஒரு பக்கம் குழப்பமும் இன்னொரு பக்கம் பதற்றம் "இது உனக்கு எப்படி தெரியும்" என்று கேட்டான் அதற்கு சுமத்திரா "வரும்போது சுந்தரம் அண்ணாவின் முகம் காட்டிக் கொடுத்துவிட்டது, அவர் முளியே சரியில்ல, இரண்டு பேரும் திருட்டு வேலை செய்கிறீர்கள் என்பது மட்டும் எனக்கு தெரிஞ்சிருச்சு" என்றாள். உடனே இருவரும் மௌனமாக நகரத் தொடங்கினார்கள். அவளது புன்னகைக்கு அவ்வளவு அர்த்தம் போல சுந்தரத்தின் எண்ணங்களும் அவளது பார்வைக்குள் நிறைவேறியது எனலாம்.

இரு பக்கங்களின் வயல்களின் அழகை ரசித்தபடியாக கங்கைவெளி ஊரினை அடைந்தார்கள், கங்கைவெளி பாலத்தின் இரு பக்கம் கொண்ட ஆற்றின் கரையோரத்தில் நின்று கொண்டு பெண்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள். வழமையான விடயம் தான் ஆண்களும் கூலி வேலைக்கு சென்று பின்னேரம் போல் இவ்வாற்றில் தான் குளிப்பார்களாம். அந்த அளவிற்கு அவ்வூருக்கு தனி சிறப்பு உண்டு.

வயசு பெண்கள் எல்லாம் சேர்ந்து குடத்தை இடுப்பில் சுமந்தவாறு அந்த வழியாக பேசிக்கொண்டு வருகிறார்கள், அந்த காட்சிகளை பார்த்தவாறு சுந்தரமும் ராமுவும் அப்பெண்களை உற்று நோக்கிப் பார்க்கின்றார்கள். ஏதோ தூரத்தில் கொலுசு சத்தம் மணி ஓசைகளாக காதுக்குள் நுழைத்துக் கொண்டிருக்கிறது இடைவிடாமல் இருவரும் நோக்கினார்கள். இரு தேவதைகள் குடத்தை இடுப்பில் தாங்கியவாறு நெருங்கி வந்து கொண்டிருந்தார்கள். இருவரும் இவர்களின் காதல் ஜோடிகள் தான் எண்ணங்கள் எல்லாம் காதல் சிறகு விரித்து பறக்க ஆரம்பித்தது. கண்களால் கைது செய்து இமை வெட்டாமல் பார்வைகளால் பார்க்கின்றார்கள். வெட்கத்தின் பிடியில் இரண்டு பெண்களும் குனிந்த தலையை நிமிராமல் குடத்தை தாங்கிக் கொண்டு முன்னும் பின்னும் பார்த்தவாறு மெதுமெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

தெருவோரம் ஜனங்களும் கூடி மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர்கின்றார்கள். அந்த தெருவுக்கு அடுத்த தெருவில் ஒன்றாய் படித்த நண்பன் வீடிருந்தது. அங்குதான் அடிக்கடி அரட்டை அடிப்பது வழக்கமாம், வழமையாய் போவதைப் போலதான் ராமுவும் சுந்தரமும் நண்பனை சந்திக்கின்றார்கள். விருந்துகள் வைத்து ஒருவருக்கு ஒருவர் ஊட்டி பரிமாறினார்கள். நண்பன் காதல் விஷயம் கூட நண்பர்களுக்கு தெரியாமல் இருக்குமா? அடிக்கடி வரும் போது பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட சந்தேகமாய் பார்க்கின்ற காலம் இது. சும்மா ஊர்சனங்களும் விடுவாங்களா? இப்படித்தான் நண்பனும் வினவினான் "மச்சி உங்கள் காதல் எப்படி போகுது அந்த பொண்ணுங்கள பாத்தீங்களா..." என்றதும் "பார்த்தோம் மச்சி... ஆனால், கூட பேசத்தான் முடியலடா" என்றார்கள். "சரி கவலைப்படாத, அதுகளின் வீட்டுக்கு போய் வருவமே" என்றதும் ராமுவும் சுந்தரமும் உற்சாகத்துடன் எழுந்து நின்று மூவரும் அப்பெண் வீட்டுக்கு போனார்கள்.

அங்கே பெண்களின் தாயார் இருக்கை கொடுத்து அமர வைத்தார். சுந்தரம், ராமுவின் நண்பன் இப்பெண்களுக்கு தூரத்து அண்ணன் முறையாம், ஒரு உரிமையோடுதான் அந்த பெண்களின் வீட்டுக்கு சென்று பேசிக்கொண்டு இருக்கையில் சட்டென்று கதவுகள் திறக்கப்பட்டதும் காதலியின் அழகை ரசிக்கின்றான். மெல்லிய சிரிப்புடன் வெளி கதவுக்கு அருகே நின்றவாறு சுந்தரத்தை பார்த்தும் பார்க்காத மாதிரி இரசித்துக்கொண்டிருந்தாள். பக்கத்து வீட்டு பெண்ணும் பக்கமாய் வந்து தோழியோடு ராமுவை ஓரக் கண்களால் தாக்கிக் கொண்டிருக்கிறாள்.

"மகள் அண்ணாவுக்கு பால் தேநீர் கொண்டு வந்து கொடும்மா" என்றதும் அடுப்பங்கரைக்கு சென்று தேநீர் ஊற்ற ஆரம்பித்தாள். வீட்டிற்கு வராத விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள் சரியான முறையில் கவனிக்க வேண்டும் என்ற மனதுக்குள்ளே எண்ணிக்கொண்டு தேநீரை நீட்டினாள், அருகே தோழியும் நின்று கொண்டிருந்தாள். தேநீரும் சுவையாக இருந்தது ரசித்துக் குடித்தார்கள், ஏனென்றால், பாலுக்கு பஞ்சமில்லையாம் 50 எருமை மாடுகளும் 20 பசு மாடுகளும் இருக்காம் அப்ப எப்படித்தான் பஞ்சம் இருக்கும், அழகான வீடும், உபசரிக்கும் குடும்பமும், அன்பான காதலியும் இவையெல்லாம் எனக்கு நிலைத்திட வேண்டும் என்றெல்லாம் கற்பனைகள் தொடர்ந்தன.

எழுந்து புறப்படுவதற்கும் சுந்தரத்துக்கும் ராமுவுக்கும் எண்ணம் தோன்றவில்லை, இவர்களின் நண்பனும் ஒருவரை ஒருவர் பார்த்து விசயத்தை புரிந்து விட்டான். எப்படியாவது நண்பனின் காதலை சொல்ல வேண்டும் என்பதற்காக அந்த பெண்களின் தாயோடு பழைய புராணக் கதைகளை கதைத்துக் கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்த நேரம் சரியாக 12 மணி தாண்டுகின்றது. மாட்டுக்கு போன மகன் பசியோடு வருவார் என்று மதிய உணவை தயாரிப்பதற்கு அடுப்பங்கரையை நாடினாள்.

இரு பெண்களையும் நோக்கியவாறு சுந்தரமும் ராமுவும் காதலை சொல்ல முற்படுகிறார்கள் ஆனால் வார்த்தைகள் எங்கோ முட்டுகின்றது. நிலத்தில் குனிந்து அவன் நிழலை தேடினான் நிழலும் கல்லாகி போனது.

மாட்டிற்கு போன அண்ணன் வீட்டுக்கு வந்து விட்டான். ராமு மற்றும் சுந்தரத்தின் நண்பனை கண்டதும் நலம் விசாரித்துக் கொண்டு இருவரையும் உற்றுப் பார்த்தான். அண்ணனை கண்ட தங்கைகளும் பதட்டத்துடன் உள் நுழைந்தார்கள். தங்கைகளின் பதட்டம், ராமு மற்றும் சுந்தரத்தின் பார்வைகளில் சந்தேகம் கொண்டு வீட்டின் உள் சென்று வந்து திருமண அழைப்பிதழை நீட்டினான். அன்பு தங்கையின் திருமணம் வருகிற ஆவணி மாதம் நடத்த உள்ளோம். நீங்களும் குடும்பத்தோடு வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று கூறி கதைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான் சுந்தரமும் ராமுவும் உடைந்து போனார்கள், கண்களால் கண்களில் நீரும் வெளியேற முற்படுகிறது. சுந்தரத்தின் காதல் தோல்வியால் ராமுவும் தனது காதலியை மறக்க ஆரம்பித்தான், அவள் வாழ்ந்த ஊரும் வயல் வெளிக்காற்றும், அவள் அடிக்கடி செல்லும் கோவிலும் கங்கை வெளிபாலத்துடன் முடிகின்றது...

பிரேசில்

டெங்கு காய்ச்சலால்

# 391 பேர் பலி

பிரேசிலில் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்த சுகாதாரத்துறையினர் கடுமையாகப்போராடும் நிலையில், அங்கு 391 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டெங்கு காய்ச்சலுக்கான பரிசோதனைகளை பொதுமக்கள் அதிக அளவில் மேற்கொள்ள அந்நாட்டு அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது.

இதன்படி, இந்த ஆண்டில் இதுவரை 15 இலட்சத்து 83 ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சல் பாதிப்புக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 12 ஆயிரத்து 652 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தனர் எனவும் அந்த நாட்டின் சுகாதாரத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,டெங்கு காய்ச்சல் பாதிப்புக்குள்ளாகி இந்த ஆண்டு இதுவரை 391 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 854 இறப்புகள் விசாரணையில் உள்ளதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.





ஜப்பான்

## ஒரு பூனையால் ஒரு நகரமே பீதியில்

மேற்கு ஜப்பானில் உள்ள புகுயாமா நகரம் ஒரு பூனையைக் கண்டு அஞ்ச வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அந்தப் பூனை மீது ஒட்டியிருக்கும் இரசாயனம்தான்.

ஒரு தொழிற்சாலையின் விஷத் தன்மை மிக்க இரசாயனம் இருந்த தொட்டியில் இந்தப் பூனை விழுந்துள்ளது. அதன்பின்னர் அது அந்தப் பகுதியில் சுற்றித் திரிந்து கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் அதனிடமிருந்து விலகி இருக்குமாறு அப்பகுதி மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

புகுயாமாவில் உள்ள அதிகாரிகள் பொதுமக்களை இந்தப் பூனையிடம் இருந்து விலகி இருக்குமாறும், அது எங்கேனும் தென்பட்டால் பொலிஸாரிடம் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஹெக்ஸாவலன்ட் குரோமியம் என்று அழைக்கப்படும் இந்த இரசாயனம், மிக அதிக அமிலத்தன்மை கொண்டதோடு, புற்றுநோயை உண்டாக்கக் கூடியது என்று அறியப்படுகின்றது.

ஜப்பான்

வீட்டோ அதிகார நாடுகள் பற்றி

## ஐ.நா. சபையில் இந்தியா விமர்சனம்

ஐக்கிய நாடுகளில் வீட்டோ அதிகாரம் பெற்ற நாடுகள் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி தீவிரவாதிகளின் பட்டியலை வெளியிடுவதைத் தடுப்பதாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா குற்றம்சாட்டியுள்ளது.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் ஐநாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருச்சிரா கம்போஜ் கூறுகையில், உலகளவில் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்களின் பட்டியலைக்கூட ஐநாவின் வீட்டோ அதிகாரம் பெற்ற நாடுகள் வெளியிட மறுத்து வருகின்றன. இவ்வாறு வீட்டோ நாடுகள் செயல்படுவது என்பது தீவிரவாதத்தைத் தடுத்து நிறுத்துவதென்று இந்த சபை ஏற்றிருக்கும் கொள்கைக்கு விரோதமானது. ஐநா சபை இரட்டை நிலைப்பாடு எடுப்பதற்கு இது சமமாகும். சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய ஐநா சபையில் நிறைவேற்றப்படும் முடிவுகள் சார்ந்த கூட்டங்களில் உறுப்பு நாடுகளுக்கு இடையில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். ஐ.நாவுக்கு பெரும் எண்ணிக்கையிலான அமைதிப்படை வீரர்களை அனுப்பிவரும் நாடு என்கிற முறையில், இந்த கோரிக்கையை முன்வைக்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.





பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய அஷ்வின்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியாவின் இரவிச்சந்திரன் அஷ்வின் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான ஐந்தாவது டெஸ்டில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை அஷ்வின் அடைந்துள்ளார்.

இதேவேளை, நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் ஜொஷ் ஹேசில்வூட், நான்காமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவிச்சந்திரன் அஷ்வின், 2.ஜொஷ் ஹேசில்வூட், ஜஸ்பிரிட் பும்ரா, 4.ககிஸோ றபாடா, 5.பற் கமின்ஸ், 6.நேதன் லையன், 7.இரவீந்திர ஜடேஜா, 8.பிரபாத் ஜெயசூரிய, 9.ஜேம்ஸ் அன்டர்சன், 10.ஷகீன் ஷா அஃப்ரிடி.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 62 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்தின் டரைல் மிற்செல், நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேன் வில்லியம்சன், 2.ஜோ றூட், 3.பாபர் அஸாம், டரைல் மிற்செல், 5.ஸ்டீவ் ஸ்மித், 6.றோஹித் ஷர்மா, 7.திமுத் கருணாரத்ன, 8.யஷஸ்வி ஜைஸ்வால், 9. விராட் கோலி, 10. ஹரி ப்ரூக்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவீந்திர ஜடேஜா, 2.இரவிச்சந்திரன் அஷ்வின், 3.ஷகிப் அல் ஹஸன், 4.ஜோ றூட், 5.ஜேஸன் ஹோல்டர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானுக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 138 ஓட்டங்களைப் பெற்ற அயர்லாந்தின் ஹரி டெக்டர், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஆறாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.பாபர் அஸாம், 2.ஷுப்மன் கில், 3.விராட் கோலி, 4.ஹரி டெக்டர், 5.றோஹித் ஷர்மா, 6.டரைல் மிற்செல், 7.டேவிட் வோர்னர், 8.டேவிட் மலான், 9.றஸி வான் டர் டுஸன், 10.ஹென்றிச் கிளாசென்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேஷவ் மஹராஜ், 2.ஜொஷ் ஹேசில்வூட், 3.அடம் ஸாம்பா, 4.மொஹமட் சிராஜ், 5.ஜஸ்பிரிட் பும்ரா, 6.ஷகீன் ஷா அஃப்ரிடி, 7.மொஹமட் நபி, 8.குல்தீப் யாதவ், 9.ட்ரெண்ட் போல்ட், 10.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.மொஹமட் நபி, 2.ஷகிப் அல் ஹஸன், 3.சிகண்டர் ராசா, 4.அசாட் வலா, 5.ரஷீட் கான்.

## எல்ல விளையாட்டுப் போட்டி

சிவா ஸ்ரீதரராவ்



ரம்புக்கன - தெடிவெல விவசாய சேவை சங்கத்தின் பெண்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட எல்ல விளையாட்டுப்போட்டி ரம்புக்கன அசோக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் 16 அணிகள் பங்குபற்றின. இப்போட்டியில் ஏவாதிவெல விவசாய சேவை சங்கம் முதலாம் இடத்தையும், இரண்டாம் இடத்தை உதங்விட்ட விவசாய சேவை சங்கமும் வெற்றி பெற்றது.

இந்தியா

## ஏழை குடும்ப பெண்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி



இந்தியப் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, காங்கிரஸ் கட்சி பெண்களுக்கு 5 வாக்குறுதிகளை அறிவித்துள்ளது.

அத்துடன், காங்கிரஸ் கட்சியின் 2ஆம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பெண்களுக்கான ஐந்து வாக்குறுதிகளை அறிவித்துள்ளார்.

அதன்படி, காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

மத்திய அரசின் புதிய பணி நியமனங்களில் பெண்களுக்கு 50% இடங்கள் வழங்கப்படும். அங்கன்வாடி, சத்துணவுத் திட்ட பணியாளர்களின் ஊதியத்திற்கான மத்திய அரசின் பங்களிப்பு இரட்டிப்பாக்கப்படும்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கான அனைத்து மாவட்டங்களிலும் சாவித்ரி பாய் பூலே விடுதி அமைக்கப்படும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

## சாம்பார் தகராறால் ஒருவர் உயிரிழந்தார்



உணவுப் பார்சல் வாங்க வந்த தந்தை, மகன் கூடுதல் சாம்பார் கேட்டதால் ஏற்பட்ட தகராறு முற்றிக் கைகலப்பாக மாறியதில், உணவக உரிமையாளர் பரிதாபமாக உயிரிழந்தார்.

சென்னை - பல்லாவரத்தை அடுத்த பம்மல் மெயின் ரோட்டில் இயங்கி வரும் பிரபல உணவகத்தில் உணவுப் பார்சல் வாங்கிய பிறகு அவர்கள் கூடுதலாக சாம்பார் கேட்டதாகக் கூறப்படுகிறது. கூடுதல் சாம்பார் தர உணவக ஊழியர் மறுத்ததால் தகராறு ஏற்பட்டு தந்தையும், மகனும் சேர்ந்து, உணவக காவலாளியைத் தாக்கியுள்ளனர்.




மகாராஷ்டிரா

## உயிரை பணயம் வைத்து பயணிகளை காப்பாற்றிய சாரதி

மகாராஷ்டிராவில், கொள்ளையர்கள் தன்னை துப்பாக்கியால் சுட்டும் அதனைப் பொருட்படுத்தாமல் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு வாகனத்தைச் செலுத்தி வந்து பயணிகளின் உயிரைக் காப்பாற்றினார் சாரதி ஒருவர்.

சாரதியாக பணியாற்றி வரும் இவர், வழக்கம்போல் பணிக்குத் திங்கட்கிழமை (11) சென்றிருந்தார். அப்போது சுமார் 35க்கும் மேற்பட்ட பயணிகளுடன் வானை ஓட்டிச் சென்றுள்ளார்.

தேசிய நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்தபோது, திடீரென கார் ஒன்று அவர்களை வேகமாக பின் தொடர்ந்துள்ளது. அந்த வாகனத்தில் இருந்தவர்கள் இறங்கி உடனடியாக வானை நிறுத்துமாறு வழிமறித்துள்ளனர்.


இவர்கள், கொள்ளையர்கள்தான் என்பதை உணர்ந்து கொண்ட சாரதி வானை நிறுத்தாமல் வேகமாகச் சென்றுள்ளார். இதனால், கோபமடைந்த கொள்ளையர்கள் அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதனால், காயமடைந்த அவர் காயத்தைப் பொருட்படுத்தாமல் வாகனத்தை நிறுத்தாமல் 30 கிலோமீட்டர் தூரத்திற்கு ஓட்டி பயணிகளைக் காப்பாற்றியுள்ளார்.

## சம்பியன்ஸ் லீக்: காலிறுதியில் பார்சிலோனா

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா தகுதி பெற்றுள்ளது.

இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியின் மைதானத்தில் நடைபெற்ற இறுதி 16 அணிகளுக்கான முதலாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய பார்சிலோனா, தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்று 4-2 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பார்சிலோனா சார்பாக பெர்மின் லொபெஸ், ஜோவா கான்செலோ, றொபேர்ட் லெவன்டோஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை அமிர் றர்ஹமனி பெற்றிருந்தார்.




## பிறீமியர் லீக் செல்லும் ஜூலெஸ் கூன்டே



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் பின்களவீரரான ஜூலெஸ் கூன்டேயைக் கைச்சாத்திடுவதில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான செல்சி, மன்செஸ்டர் யுனைட்டெட் ஆர்வம் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பார்சிலோனாவுடன் இன்னும் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 25 வயதான கூன்டே பார்சிலோனாவிலேயே தொடர விரும்புகின்றபோதும், அக்கழகம் வேறெவரையும் கைச்சாத்திடுவதற்கு முன்னர் தனது வீரர்களை விற்க வேண்டிய நிலையில் காணப்படுகிறது.

## செல்சியிலிருந்து விலகும் ஸ்டேர்லிங்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரர் ரஹீம் ஸ்டேர்லிங் உள்ளிட்ட சில நட்சத்திரங்களை கழகத்திலிருந்து வெளியேற்ற செல்சி விரும்புவதாகக் கூறப்படுகிறது.

செல்சியுடன் இன்னும் மூன்றாண்டு ஒப்பந்தத்தை 29 வயதான ஸ்டேர்லிங் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 14 , மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.